# தஜ்வீத் உடைய சட்டங்கள்

தேதி: 17 டிசம்பர் 2010.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு,

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வை போற்றி புகழ்ந்து, அகிலத்தார்க்கு அருட்கொடையாக வந்த எம்பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும், அவர்கள் கிளையார்கள், ஸஹாபாக்கள், அவர்களை பின்பற்றி நடப்போர் அனைவர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக! ஆமீன்.

தஜ்வீத் உடைய சட்டங்களை அட்டவணை [Chart] வடிவில் இலகுவாக அமைத்துள்ளோம். நாங்கள் இந்த துறையில் சிறந்தவர்கள் அல்ல. என்றாலும் பல புத்தகங்களை ஆராய்ந்து பார்த்து எழுதியுள்ளோம். இது ஆசிரியர்கள் பாடம் நடுத்துவதற்கும், தஜ்வீதை அறிந்த மாணவர்கள் திரும்ப நினைவுகூர்வதற்கும் வசதியாகவும், எளிதாகவும் இருக்கும் என நம்புகிறோம். இதை தயார் செய்ய கீழ்கானும் நூற்கள் எங்களுக்கு உதவியாக அமைந்தன:

1. மௌலவி முஹம்மது இப்றாஹீம் ஸாஹிப் பாக்கவீ, ஹிதாயத்துஸ் ஸி∴ப்யான் ∴பீ தஜ்வீதில் குர்ஆன், Haadi Publishers, Chennai, Tamil Nadu, India. [In Tamil]
2. Dr. Abdul-majid Khan, **Tajwid: The art of recitation of the Holy Quran**, Urdu Academy Sind, Karachi, Pakistan. [In English]
3. عزّت عبيد الدعاس, **فنّ التجويد**, Dar Ibn Hajam, Beirut, Lebanon. [In Arabic]
4. Umm Muhammad, **A Brief Introduction to Tajweed**, Abul-Qasim Publishing House, Jeddah. [In English]

இதை உருவாக்க உதவிய அன்பர்களுக்கு எங்கள் இதயபூர்வமான நன்றிகள். அவர்களுக்கு அல்லாஹ் அருள்பாலிப்பானாக! இதில் ஏதேனும் பிழை இருப்பின், உடனே தெரிவிக்க வேண்டுகிறோம். வல்ல அல்லாஹ் நம் அனைவருடைய பிழைகளை பொறுப்பானாக! ஆமீன். இதை வாசிக்கும் அன்பர்கள் எங்களுடைய பெற்றோர்களுக்காக துஆ செய்ய வேண்டுகிறோம். வஸ்ஸலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
M.I. Seyed Mohamed Buhari,
24-E, Mohideen Street, Kayalpatnam – 628 204.Tamil Nadu. INDIA.
Email: mibuhari@yahoo.com, mibuhari@gmail.com


أحكام التّجويد
தஜ்வித் உடைய சட்டங்கள்
أحكام الحروف
எழுத்துகளுடைய சட்டங்கள்
أحكام الوقف
நிறுத்தக் குறிகளுடைய சட்டங்கள்
مخارج الحروف
எழுத்துகளுடைய பிறப்பிடங்கள்
أحكام المدّ
மத்துடைய சட்டங்கள்
أحكام الإدغام
இத்ஙாம் உடைய சட்டங்கள்
القلقلة
கல்கலா உடைய சட்டங்கள்
أحكام الميم والنون المشددتين
ஷத்து செய்யப்பட்ட நூன் மற்றும் மீம் உடைய சட்டங்கள்
أحكام حرف اللام
லாம் உடைய சட்டங்கள்
أحكام الراء
ரா உடைய சட்டங்கள்
أحكام النون الساكنة والتنوين
ஸுகூன் பெற்ற நூனும் தன்வீனும்
أحكام حرف الميم الساكنة
ஸுகூன் பெற்ற மீம் உடைய சட்டங்கள்
الوقف والابتداء
நிறுத்துதல் ஆரம்பித்தல்
علامات الضبط
அடையாள குறிகள்
الحرفان اللهويان
நாவின் கடைசியிலிருந்தும் மேல் முறசிலிருந்தும்
الخيشوم
மூக்குத்தண்டிலிருந்தும் மூக்குத் துவாரத்திலிருந்தும் குன்னா
الحروف الأسلية
நுனி நாவிலிருந்தும் கீழ் பற்களின் நடுவில்
الحروف الحلقية
தொண்டை
الحروف اللثوية
நுனி நாவிலிருந்தும் மேல் நடுப்பற்களின் ஒரங்களிலிருந்தும்
الحروف الشفوية
இரண்டு உதடுகளிலிருந்தும்
الحروف النطعية
நுனி நாவிலிருந்தும் மேல் நடுப்பற்களின் வேரிலிருந்தும்
الحروف الشجرية
நாவின் நடுப்பாகத்திலிருந்தும் மேல் முறசுடன் இணைந்து
الحروف الحافي
நாவின் அருகிலிருந்தும் மேல் கடவாய்ப் பற்களுடைய இரு ஈறுகளின் இடப்பக்கம் அல்லது வலபக்கம்
الحروف الذلقية
நாவின் நுனியிலிருந்தும் மேல் முறசிலிருந்தும்


أحكام الحروف
எழுத்துகளுடைய சட்டங்கள்
أحكام الإدغام
இத்நாம் உடைய சட்டங்கள்
أحكام المدّ
மத்துடைய சட்டங்கள்
أحكام حرف الميم الساكنة
ஸுகூன் பெற்ற மீம் உடைய சட்டங்கள்
أحكام النون الساكنة والتنوين
சுகூன் செய்யப்பட்ட நூன் மற்றும் தன்வீன் உடைய சட்டங்கள்
أحكام حرف اللام
லாம் உடைய சட்டங்கள்
المتماثلين
முதமாதிலைன்
المتجانسين
முதஜானிஸைன்
المتقاربين
முதகாரிபைன்
المدّ الفرعي
மத்து பர்யீ
المدّ الاصلي
மத்து அஸ்லீ
الإظهار الشفوي
இழ்ஹாருஷ் ஷபவீ
الإدغام الشفوي
இத்நாமுஷ் ஷபவீ
الإخفاء الشفوي
இ.்.பாவுஷ் ஷபவீ
الإظهار
இழ்ஹார்
الإدغام
இத்நாம்
الإخفاء
இ.்.பா
الإقلاب
இக்லாப்
لام الفعل
வினைச் சொல்லில் உள்ள லாமுடைய சட்டம்
لام لفظ الجلالة
அல்லாஹ் என்ற வார்தையில் உள்ள லாமுடைய சட்டம்
لام التعريف
லாம் த.்.ரீ.்.ப்
لام الشمسية
ஷம்ஷியா உடைய லாமின் சட்டம்
لام القمرية
கமரிய்யா உடைய லாமின் சட்டம்
أحكام الحروف
எழுத்துகளுடைய சட்டங்கள் (தொடர்ச்சி...)
القلقلة
கல்கலா உடைய சட்டங்கள்
أحكام الراء
ரா உடைய சட்டங்கள்
أحكام الميم والنون المشددتين
ஷத்து செய்யப்பட்ட நூன் மற்றும் மீம் உடைய சட்டங்கள்


ஸூராவை ஆரம்பிக்கும் முறை
ஓத அனுமதிக்கப்பட்ட முறைகள்
தஅவ்வுத் பஸ்மலா ஸூரா இம்மூன்றையும் பிரித்து ஓதுவது
தஅவ்வுத் பஸ்மலா ஸூரா இம்மூன்றையும் சேர்த்து ஓதுவது
தஅவ்வுதையும் பஸ்மலாவையும் ஒன்றாய் சேர்த்தும் ஸூராவை மட்டும் தனியே பிரித்து ஓதுவது
தஅவ்வுதை மட்டும் தனியாகவும் பஸ்மலா ஸூரா இரண்டையும் சேர்த்து ஓதுவது


ஸூராக்களை தொடர்ச்சியாக ஓதும் முறை
ஓத அனுமதிக்கப்பட்ட முறைகள்
ஓத அனுமதிக்கப்படாத முறை
முதல் ஸூரா, பஸ்மலா, இரண்டாவது ஸூரா இம்மூன்றையும் பிரித்து ஓதுவது
முதல் ஸூராவை தனியாகவும், பஸ்மலா மற்றும் இரண்டாவது ஸூராவை சேர்த்து ஓதுவது
முதல் ஸூரா, பஸ்மலா, இரண்டாவது ஸூரா இம்மூன்றையும் சேர்த்து ஓதுவது
முதல் ஸூராவையும் பஸ்மலாவையும் சேர்த்து, இரண்டாவது ஸூராவை தனியாக ஓதுவது

## أحكام النون الساكنة والتنوين
## ஸுகூன் பெற்ற நூன் அல்லது தன்வீனுக்குப் பின்னால் வரும் வார்த்தைகளை ஓதும் முறை

**نْ , ـٌـًـٍ**
**ஸுகூன் பெற்ற நூன் அல்லது தன்வீன்**

### الإظهار — இழ்ஹார்
(வெளிப்படுத்தி ஓதுதல்)

ء هـ ح خ ع غ

رَسُوْلٌ أمِيْنٌ , يَنْأَوْن

### الإخفاء — இஃபா
(மறைத்து மூக்கால் ஓதுதல்)

ت ث ج د ذ ز س ش ص ض ط ظ ف ق ك

لَنْ تَفْعَلُوْا , قَوْمٌ تَجْهَلُوْن ,
كهيعص (سورة مريم)

### الإقلاب — இக்லாப்
(நூனை மீம் ஆக மாற்றுதல்)

ب

مِنْ بَعْد , خَبِيْرًا بَصِيْرًا

### الإدغام — இத்ஙாம்
(ஒரு எழுத்தை மற்றொரு எழுத்துடன் இணைத்து ஓதுதல்)

ي ر م ل و ن

#### إدغام ناقص
مع غنة
(ஃகுன்னாவுடன் ஓதுதல்)

ي و م ن

مِنْ وَالٍ , هُزُوًا وَلَعِبً

#### إدغام تام அல்லது إدغام كامل
بدون غنة
(ஃகுன்னா அன்றி ஓதுதல்)

ر ل

مِنْ لَدُنْكَ , غَفُوْرٌ رَّحِيْمٌ

---

**விதி விலக்கு:**

1. ஒரே வார்த்தையில் இத்ஙாம் செய்யப்படாது (يس மற்றும் ن)
   **يس والقرأن الحكيم**
   **ن والقلم وما يسطرون**

2. வார்த்தைகளுக்கு மத்தியில் நிறுத்தப்பட்டால் இத்ஙாம் செய்யப்படாது
   وَقِيْلَ مَنْ رَاقٍ

3. ஒரே வார்த்தையில் நூனே ஸாகினுக்குப்பின் ي அல்லது و வந்தால் இழ்ஹாராக ஓதவேண்டும்
   دُنْيَا قِنْوَانٌ بُنْيَان صِنْوَانٌ

## أحكام حرف الميم الساكنة
## ஸுகூன் பெற்ற மீம்மிற்க்குப் பின்னால் வரும் வார்த்தைகளை ஓதும் முறை

مْ
ஸுகூன் பெற்ற மீம்

| إظهار شفوي<br>இழ்ஹாருஷ் ஷபவீ | إخفاء شفوي<br>இ.ஃபாவுஷ் ஷபவீ | إدغام شفوي<br>இத்ஙாமுஷ் ஷபவீ |
| --- | --- | --- |
| (வெளிப்படுத்தி ஓதுதல்)<br>ب م இவை இரண்டையும் தவிர | (மூக்கால் .ஃகுன்னாவுடன் ஓதுதல்)<br>ب | مع غنة<br>(.ஃகுன்னாவுடன் ஓதுதல்)<br>م |
| أَلَمْ تَرَ | رَبُّهُمْ بِهِمْ | مِنْهُمْ مَنْ كَلَّمَ اللهُ |

## أحكام الميم والنون المشددتين
## ஷத்து செய்யப்பட்ட நூன் மற்றும் மீம் உடைய சட்டங்கள்

ஷத்து செய்யப்பட்ட மீம் அல்லது நூனை குன்னாவுடன் ஓத வேண்டும், நிறுத்தும் போதும் குன்னாவுடன் ஓத வேண்டும்

ஷத்து செய்யப்பட்ட நூனிற்க்கு உதாரணம்: مِنَ الجِنَّةِ وَالنَّاس , جَانٌّ

ஷத்து செய்யப்பட்ட மீமிற்க்கு உதாரணம்: ثُمَّ , لَمَّا

## கல்கலா உடைய சட்டங்கள்

கல்கலாவுடைய எழுத்துகள் ஸுகூன் பெற்ற நிலையில் ஒரு வார்தையின் நடுவிலோ அல்லது நிறுத்தும் இடத்திலோ வந்தால் அசைத்து ஓத வேண்டும்

القلقلة
கல்கலாவின் எழுத்துக்கள்

قطب جد

صغرى
(குறைவாக அசைத்தல்)

கல்கலாவுடைய எழுத்துகள் ஸுகூன் பெற்று ஒரு வார்தையின் நடுவில் வந்தால்

مِقْدَارَ

كبرى
(அதிகமாக அசைத்தல்)

கல்கலாவுடைய எழுத்துகள் ஸுகூன் பெற்று நிறுத்தும் போது வந்தால்

مِيْثَاقْ

## أحكام الإدغام
## இத்காம் உடைய சட்டங்கள்

### إدغام
### இத்காம்

முந்திய எழுத்து ஸுகூனும் அடுத்த எழுத்து ஜபர் அல்லது ஜேர் அல்லது பேஷ் பெற்றிருந்தால்

#### متماثلين
#### முதமாதிலைன்

சுகூன் செய்யப்பட்ட எழுத்தும் அதற்கு அடுத்த எழுத்தும் ஒன்றாக இருந்தால்

إِذْ ذَّهَبَ مُغَاضِبًا

#### متقاربين
#### முதகாரிபைன்

சுகூன் செய்யப்பட்ட எழுத்தும் அதற்கு அடுத்த எழுத்தும் வேறாக இருந்து வெளிப்படும் இடம் அருகில் இருந்தால்

ث உடன் ذ ; ب உடன் م ; ق உடன் ك

يَلْهَثْ ذَالِكَ

#### متجانسين
#### முதஜானிஸைன்

சுகூன் செய்யப்பட்ட எழுத்தும் அதற்கு அடுத்த எழுத்தும் வேறாக இருந்து வெளிப்படும் இடம் ஒன்றாக இருந்தால்

ت உடன் ط அல்லது د ; د உடன் ت ;

ل உடன் ر ; ط உடன் ت ; ذ உடன் ظ

إِذْ ظَّلَمُوْ, قُلْ رَّبِّ , لَقَدْ تَابَ , بَلْ رَفَعَهُ , هَلْ رَأَيْتُمْ , اَمَنَتْ طَائِفَةٌ , اُجِيْبَتْ دَعْوَتُكُمَا

என்பதை

إِظَّلَمُوْ , قُرَّبِّ , لَقَتَّابَ , بَرَّفَعَهُ , هَرَّ أَيْتُمْ , اَمَنَطَّائِفَةٌ , اُجِيْبَدَّعْوَتُكُمَا

என்று ஓதவும்

விதி விலக்கு:

1. ஒரே மாதிரியான இரண்டு எழுத்துக்களும் ஹரக்கத்து பெற்றிருந்தால்
   ذَهَبَ بِسَمْعِهِمْ
2. இரண்டு எழுத்துக்களும் மத்துடைய எழுத்தாக இருந்தால் (வாவும் யாவும்)
   هَادُوْا وَالنَّصَارى
3. ஒரே மாதிரியான இரண்டு எழுத்துக்களுக்கும் மத்தியில் நிறுத்தினால்
   مَالِيَهْ هَلَكَ

மத்துடைய எழுத்துக்கள் லீன் ஆக (ஸுகூன் செய்யப்பட்ட வாவ் அல்லது யாக்கு முன்னால் உள்ள எழுத்து ஜபர் பெற்றிருந்தால்) இருந்தால் குன்னா அன்றி இத்காம் செய்ய வேண்டும்

بِمَا عَصَوْا وَكَانُوْا என்பதை بِمَا عَصَوَّكَانُوْا என்று உச்சரிக்க வேண்டும்

# أحكام الراء
# ரா உடைய சட்டங்கள்

(تَفْخِيْم) என்ற எழுத்துக்களை (ق ظ ط غ ض ص خ) حروف الإِسْتِعْلاَءْ சத்தமாக ஓதவும். இதை خُصَّ ضَغْطٍ قِظْ என்று மனனம் செய்யலாம்.

اُدْخُلُوْهَا , وَالصَّافَاتِ , فَضَّلْنَا بَعْضَهُمْ , غَاسِقٍ , وَالطَّيِّبُوْنَ , وَالْحَقُّ أَقُوْلُ , إِنَّا مُنْظِرُوْن

## أحكام الراء
## ரா உடைய சட்டங்கள்

### تفخيم
### வல்லினம்

1. ரேய்க்கு ஜபர், பேஷ், தோஜபர் அல்லது தோபேஷ் இருந்தால் ( رَ رُ رً رٌ )
2. ஷத்து செய்யப்பட்ட ரேய்க்கு ஜபர், பேஷ், தோஜபர் அல்லது தோபேஷ் இருந்தால் ( رَّ رُّ رٌّ رًّ )
3. ரேவுக்கு சுகூன் செய்யப்பட்டு அதற்கு முந்திய எழுத்துக்கு ஜபர் அல்லது பேஷ் இருந்தால் ( ـُرْ , ـَرْ )
4. ரேவும் அதற்கு முந்திய எழுத்தும் சுகூன் பெற்றிருந்து அதற்கு முந்திய எழுத்துக்கு ஜபர் அல்லது பேஷ் இருந்தால் ( ـُـْرْ , ـَـْرْ )
5. ரேவுக்கு சுகூன் செய்யப்பட்டு அதற்கு முந்திய எழுத்து அசலான ஜேர் பெற்றிருந்து ரேவுக்கு பின்னால் இஸ்தி∴லாவுடைய (ق ظ ط غ ض ص خ) எழுத்து வந்தால்
6. ரேவுக்கு சுகூன் செய்யப்பட்டு அதற்கு முந்திய எழுத்து தற்காலிக ஜேர் பெற்றிருந்தால் ( اِرْ )

رَبَّنَا , سِرٌّ , بَرْقٌ

اَلْعُسْرْ , اَلْقَدْرْ , فِرْقَةٌ , اِرْتَضى

رَبِّ ارْحَمْهُمَا என்பதை رَبِّ اِرْحَمْهُمَا என்று வல்லின ரேவாக ஓத வேண்டும்

### இரு வகையாகவும் ஓதலாம்
### (வல்லினம் மற்றும் மெல்லினம்)

1. فِرْق -- மெல்லினமாக ஓதுவது ஏற்றம்
2. القِطْر -- மெல்லினமாக ஓதுவது ஏற்றம்
3. مِصْر -- வல்லினமாக ஓதுவது ஏற்றம்

### ترقيق
### மெல்லினம்

1. ரேவுக்கு ஜேர் அல்லது தோஜேர் இருந்தால் ( رِ , رٍ )
2. ஷத்து செய்யப்பட்ட ரேவுக்கு ஜேர் அல்லது தோஜேர் இருந்தால் ( رِّ , رٍّ )
3. ரேவுக்கு சுகூன் செய்யப்பட்டு அதற்கு முந்திய எழுத்துக்கு ஜேர் இருந்தால் ( ـِرْ )
4. ரேவும் அதற்கு முந்திய எழுத்தும் சுகூன் பெற்றிருந்து அதற்கு முந்திய எழுத்துக்கு ஜேர் இருந்தால் ( ـِـْرْ )
5. ரேவுக்கு சுகூன் செய்யப்பட்டு அதற்கு முந்திய எழுத்து சுகூன் செய்யப்பட்ட யாவாக இருந்து அதற்கு முந்திய எழுத்துக்கு ஜபர் இருந்தால் ( ـَيْرْ )
6. مجرها என்ற வார்த்தை (11:41)

رِجَالٌ , دُرِّيٌّ

اَنْذِرْ , حِجْر , خَيْر



اللام حرف أحكام
லாம் உடைய சட்டங்கள் [1]
لام لفظ الجلالة
அல்லாஹ் என்ற வார்தையில் உள்ள லாமுடைய சட்டம்
அல்லாஹ் என்ற வார்தை அல்லாத மற்றைய வார்த்தைகளில் லாம் வந்தால்
ترقيق
மெல்லீனம்
مَاوَلَّهُمْ , كُلُّهُ
تفخيم
வல்லினம்
اللهُ அல்லது اللهَ
அல்லாஹ் என்ற வார்தைக்கு முந்திய எழுத்து ஜபர் அல்லது பேஷ் பெற்றிருந்தால்
رَفَعَهُ الله ,أَرَادَ الله
ترقيق
மெல்லினம்
اللهِ
அல்லாஹ் என்ற வார்தைக்கு முந்திய எழுத்து ஜேர் பெற்றிருந்தால்
بِسْمِ الله , اَلْحَمْدُ لِله
لام التعريف
லாம் த.'.ரீ.'.ப்
லாமுக்கு பின்னால் வரும் எழுத்துகளை உச்சரிக்கும் முறை
لام الشمسية
ஷம்ஷியா உடைய லாம்
லாமை ஷம்ஸிய்யா எழுத்துடன் இத்ஙாம் செய்தல்
ت ث د ذ ر ز س ش ص ض ط ظ ل ن
وَالطُّوْر
لام القمرية
கமரிய்யா உடைய லாம்
லாமை கமரிய்யா எழுத்துடன் இழ்ஹார் செய்தல்
ب ج ح خ ع غ ف ق ك م و ه ي ء
اَلْبَصِيْر

# أحكام حرف اللام
# லாம் உடைய சட்டங்கள் [2]

لام الفعل
வினைச் சொல்லில் உள்ள லாமுடைய சட்டம்

வினைச்சொல்லின் ஆரம்பத்திலோ அல்லது நடுவிலோ சுகூன் செய்யப்பட்ட லாம் வந்தால் இழ்ஹாராக ஓத வேண்டும்

**فِئَتَيْنِ الْتَقَتَا**

**فعل ماضي** [ கடந்த காலம் ] : **قُلْنَا , جَعَلْنَا**

**فعل مضارع** [ நிகழ் காலம் ] : **يَلْتَقِطْهُ , يُبَدلْ نِعْمَةَ**

**فعل امر** [ ஆணை ] : **قُلْ نَعَمْ , فَلْتَمِسُوْا**

லாமுக்கு பின்னால் ரா அல்லது சுகூன் செய்யப்பட்ட லாம் வந்தால் இத்நாமாக ஓத வேண்டும்

بَلْ رَفَعَهُ என்பதை بَرَّفَعَهُ
قُلْ رَبِّ என்பதை قُرَّبِّ
قُلْ لَهُمْ என்பதை قُلَّهُمْ
என்றும் உச்சரிக்க வேண்டும்

விதி விலக்கு:
நிறுத்தக் கூடிய இடங்களில் இத்நாம் செய்யப்படாது

كَلاَّ بَلْ رَانَ

சுகூன் செய்யப்பட்ட ஒரு (حروف خلق)-(ء ه ح خ ع غ) எழுத்துக்குப் பின்னால் மற்றொரு حروف خلق வந்தால், அதை الإظهار ஆக ஓதவும்

فَاصْفَحْ عَنْهُمْ , فَسَبحْهُ

சுகூன் செய்யப்பட்ட ஒரு (حروف خلق)-(ء ه ح خ ع غ) எழுத்துக்குப் பின்னால் அதே حروف خلق வந்தால், அதை الإذعام ஆக ஓதவும்

يُوَجِّهْهُ


أحكام الألف
அலி.்.ப் உடைய சட்டங்கள்
அலி.்.பை வாசிக்கும் முறை
تفخيم
வல்லினம்
ترقيق
மெல்லினம்
அலி.்.புக்கு முன்னால் இஸ்தி.்.லாவுடைய (خ ص ض غ ط ظ ق) எழுத்து வந்தால் வல்லினமாக ஓத வேண்டும்
அலி.்.புக்கு முன்னால் இஸ்தி.்.லா அல்லாத எழுத்து வந்தால் மெல்லினமாக ஓத வேண்டும்
عصى
عسى

## أحكام المدّ
## மத்துடைய சட்டங்கள் [1]

**ـَا , ـِيْ , ـُوْ**

**மத்துடைய சட்டங்கள்**

### مدّ اصلي
### மத்து அஸ்லீ

1. மத்துடைய எழுத்துக்குப் பின்னால் ஸுகூன் அல்லது ஹம்ஜா இருக்காது
2. ஓர் அலி.ஃப் அளவு நீட்ட வேண்டும்
3. மத்து அஸ்லிக்கு தபயீ, ஜாத்தி என்றும் கூறப்படும்

أُوْتِيْنَا

#### مدّ بدل
#### மத்து பதல்

மத்துடைய எழுத்துக்குப் முன்னால் ஹம்ஜா வரும்

آمَنَ , إيمان , أُوْتِيَ

#### مدّ عوض
#### மத்து இவழ்

நிறுத்தும் போது தோஜபர் அலி.ஃப் ஆக மாறிவிடும்

أَفْوَاجًا என்பதை أَفْوَاجا என்று உச்சரிக்க வேண்டும்

### مدّ فرعي
### மத்து பர்யீ

மத்துடைய எழுத்துக்குப் பின்னால் ஸுகூன் அல்லது ஹம்ஜா இருக்கும்

#### مدّ متّصل
#### மத்தே முத்தஸில்

1. ஒரே வார்தையில் மத்துடைய எழுத்துக்குப் பின்னால் ஹம்ஜா வரும்
2. நான்கு அல்லது ஐந்து அலி.ஃப் அளவு நீட்ட வேண்டும்
3. மறுபெயர்: மத்தே வாஜிப்

شَاءَ

#### مدّ منفصل
#### மத்தே முன்.ஃபஸில்

1. வேறுபட்ட வார்தையில் மத்துடைய எழுத்துக்குப் பின்னால் ஹம்ஜா வரும்
2. இரண்டிலிருந்து நான்கு அலி.ஃப் அளவு நீட்டலாம்
3. மறுபெயர்: மத்தே ஜாயிஜ்

قَالُوْا اِنَّهَا

#### مدّ لازم
#### மத்தே லாஜிம்

1. மத்துடைய எழுத்துக்குப் பின்னால் அசலான ஸுகூன் வரும்
2. மூன்றிலிருந்து ஐந்து அலி.ஃப் அளவு நீட்டலாம்

#### مدّ عارض
#### மத்தே ஆரிள்

1. மத்துடைய எழுத்துக்குப் பின்னால் தற்காலிக ஸுகூன் வரும்
2. மூன்று வகையாக ஓதலாம் (விரிவு அடுத்த பக்கத்தில்)

தொடர்ச்சி...

# أحكام المدّ
# மத்துடைய சட்டங்கள் [2]

## مدّ لازم
## மத்து லாஜிம்

### كلمى مثقّل
### கலிமி மு.ஃ.தக்கல்

ஒரே வார்தையில் மத்துடைய எழுத்துக்குப் பின்னால் ஷத்து வரும்

دابّة

### كلمى مخفّف
### கலிமி மு.ஃ.ஹப்ப.ஃ.ப்

ஒரே வார்தையில் மத்துடைய எழுத்துக்குப் பின்னால் ஸுகூன் வரும்

الئن
ஒரு இடத்தில் மட்டும்

### حرفى مثقّل
### ஹர்பி மு.ஃ.தக்கல்

ஒரே எழுத்தில் மத்துக்கு ஷத்து வரும்

طسم

### حرفى مخفّف
### ஹர்பி முஹ.ஃ.ப்ப.ஃ.ப்

ஒரே எழுத்தில் மத்துக்கு ஸுகூன் வரும்

ص

## مدّ عارض
## மத்து ஆரிள்

மூன்று வகையாகவும் ஓதலாம். ஆரம்பித்த அளவையே கடைசி வரை நீடிக்க வைக்க வேண்டும்

مُفْلِحُوْنَ என்பதை مُفْلِحُوْنْ என மாற்ற வேண்டும்

### قصر
### கஸ்ரு

ஓர் அலி.ஃ.ப் அளவு நீட்ட வேண்டும்

### توسط
### தவஸ்ஸுத்

இரண்டு அல்லது மூன்று அலி.ஃ.ப் அளவு நீட்ட வேண்டும்

### طول
### தூல்

ஐந்து அலி.ஃ.ப் அளவு நீட்ட வேண்டும்

விதி விலக்கு: ஸுரா ஆல இம்ரானில் உள்ள الم (3:1) என்ற வார்த்தையை மத்துடனோ அல்லது மத்து இல்லாமலும் ஓதலாம்

أحكام المدّ மத்துடைய சட்டங்கள் | حروف مد மத்துடைய எழுத்து ـُوْ ـِيْ ـَا | முதல் **14** மத்துக்களும் مدّ فرعي என்று அழைக்கப்படும்

| உதாரணங்கள் | நீட்டும் அளவு (حركة) | விளக்கம் | மத்தின் பெயர் | **S. No.** |
|---|---|---|---|---|
| شاء , جآء , سيء , سمآء | 5 | ஒரே வார்தையில் حروف مد க்குப் பின்னால் ء வரும் | مدّ واجب متّصل | 1 |
| قَالُوْا اِنَّهَا | 2 to 5 | வேறுபட்ட வார்தையில் حروف مد க்குப் பின்னால் ء வரும் | مدّ جاءز منفصل | 2 |
| مُفْلِحُوْنُ என்பது مُفْلِحُوْنْ என ஓதப்படும் | 2 to 6 | நிறுத்தும் போது ஜபர், ஜேர், பேஷ், தோஜேர் அல்லது தோபேஷ் (மத்துடைய எழுத்துக்குப் பின்னால்) இருந்தால் அது ஸு கூன் ஆக மாறிவிடும் | مدّ عارض للسكون | 3 |
| آدَمَ , آمَنَ | 2 | மத்துடைய எழுத்துக்குப் முன்னால் ஹம்ஜா வரும் | مدّ بدل | 4 |
| عَلِيْماً என்பது عَلِيْماَ என ஓதப்படும் | 2 | நிறுத்தும் போது தோஜபர் (மத்துடைய எழுத்துக்குப் பின்னால்) இருந்தால் அது அலிஃப் ஆக மாறிவிடும் | مدّ عوض | 5 |
| آلْآنَ என்பது ءَاَلْآنَ ஆகும் | 6 | மத்துடைய எழுத்துக்குப் பின்னால் ஸுகூன் வரும் | مدّ لازم مخفف كلمى | 6 |
| وَلاَ الضاَّلِّين , اَلطَّآمَة | 6 | மத்துடைய எழுத்துக்குப் பின்னால் ஷத்து வரும் | مدّ لازم مثقّل كلمى | 7 |
| الم , طسم , المَص | 6 | نقص عسلكم | مدّ لازم مشبع حرفى | 8 |
| طه , يس | 2 | حي طهر | مدّ لازم محفف حرفى | 9 |
| خَوْفٌ என்பது خَوْفْ என ஓதப்படும் | 2 to 6 | ـَوْ , ـَيْ | مدّ لين | 10 |
| بِهِ انْ يَضْرِبْ | 6 | ழமீர் ஹாவுக்கு (ه) பின்னால் ஹம்ஜா வரும் | مدّ صلة طويلة | 11 |
| اِنَّهُ بِهِ | 2 | ழமீர் ஹாவுக்கு (ه) பின்னால் ஹம்ஜா அல்லாத எழுத்து வந்தால் | مدّ صلة قصيرة | 12 |
| قُلْ الذَّكَرَيْنِ , قُلْ اللّهُ | 6 | ஹம்ஜா இஸ்திப்காமிற்கு (أ) பின்னால் ஷத்து வரும் | مدّ فرق | 13 |
| حُيِّيْتُمْ , اُمِّيِّيْنَ | 2 | يِ பின்னால் يْ வரும் | مدّ تمكين | 14 |
| قَالَ , يَقُوْلُ , قَيْلَ | 2 | மத்துடைய எழுத்துக்குப் பின்னால் ஸுகூன் அல்லது ஹம்ஜா இருக்காது | مدّ طَبِيْعِىْ | 15 |

أحكام حروف لين
ஹுரூ.ூ.ப் லீன் உடைய
சட்டங்கள்

حروف لين
ஹுரூ.ூ.ப் லீன்
ـَ يْ , ـَ وْ

مدّ لين لازم
மத்து லீன் லாஜிம்

1. ஹுரூ.ூ.ப் லீனுக்குப் பின்னால் அசலான ஸுகூன் வர வேண்டும்
2. துால் அல்லது தவஸ்ஸுத் அல்லது கஸ்ரு ஆக ஓதலாம். துால் ஆக ஓதுவது ஏற்றம்

இரண்டு இடங்களில் மட்டும்
كهيعص (19:1) , عسق (42:2)

مدّ لين عارض
மத்து லீன் ஆரிள்

1. ஹுரூ.ூ.ப் லீனுக்குப் பின்னால் தற்காலிக ஸுகூன் வர வேண்டும்
2. துால் அல்லது தவஸ்ஸுத் அல்லது கஸ்ரு ஆக ஓதலாம்

موت , بيت

نون قطني
நூான் குத்னீ

தன்வீனுக்குப் பின் ஓர் எழுத்து ஸுகூன் பெற்றதாக வந்தால்:
1. தன்வீனுக்கு ஜேர் செய்து ஓத வேண்டும்
2. இவைகளுக்கு மத்தியில் ஜேர் வைத்த நிலையில் நூானை சேர்க்க வேண்டும்

لُمَزَةِ نِ الَّذِيْ

விதி விலக்கு:
1. தன்வீன் பெற்ற நிலையில் நிறுத்தினால் நூானெ குத்னீ வராது
2. سورة الإخلاص ல் நிறுத்துவது சிறந்தது

குறிப்பு:
عَلَيْهِمْ மற்றும் عَلَيْكُمْ போன்ற வார்த்தைகளை மத்து ஹுரூ.ூ.ப் லீனாக, நீட்டாமல் கஸ்ரு ஆக ஓதவும்

أحكام الصّلة
சிலா∴ உடைய சட்டங்கள்

சிலா∴ என்பது ஹாவை மத்துடைய ஹர்∴பு அளவு நீட்டி ஓதுவதாகும்

விதி விலக்கு: கீழ்கானும் இடங்களில் நீட்ட கூடாது. ஏனெனில் இந்த ஹா வார்தையில் உள்ள ஹாவாகும்

هود ஸூராவில் உள்ள نفقه (11:91)
مؤمنون ஸூராவில் உள்ள فواكه (23:19)
مريم ஸூராவில் உள்ள لم تنته (19:46)

விதி விலக்கு: ழமீர் உடைய ஹாவுக்கு முன்னால் ஸுகூன் பெற்ற யா வருமானால் ஹாவுக்கு ஜேர் வைத்து ஓத வேண்டும். அது மத்தாக ஆகாது

فِيْهِ

ஆனால் فِيْهِ مُهَانًا என்பதை நீட்டி ஓத வேண்டும்

صلة بالياء
யாவை கொண்டு சிலா∴

ழமீர் உடைய ஹாவுக்கு முன்னால் உள்ள எழுத்துக்கு பேஷ் இருந்தால் வாவைக் கொண்டு நீட்டி ஓத வேண்டும்

بِهِ

صلة بالواو
வாவை கொண்டு சிலா∴

ழமீர் ஹாவுக்கு முன்னால் உள்ள எழுத்துக்கு ஜேர் இருந்தால் யாவைக் கொண்டு நீட்டி ஓத வேண்டும்

مَعَهُ

விதி விலக்கு: ஹாவிற்க்கு பேஷ் இருந்தால் ஹாவை நீட்ட கூடாது

الزمر ஸூராவில் உள்ள
وَاِنْ تَشْكُرُوْا يَرْضَهُ لَكُمْ (39:7)

விதி விலக்கு: வினைச்சொல்லுக்கு முன்னால் لم என்ற வார்த்தை வருமானால் வினைச்சொல்லில் உள்ள யாவை நீக்கி நீட்டாமல் ஓத வேண்டும்

لم يتنهي என்பதை لم يتنه என்று உச்சரிக்க வேண்டும்

விதி விலக்கு: ழமீர் உடைய ஹாவுக்கு முன்னால் ஸுகூன் பெற்ற யா அல்லாத பிற எழுத்துக்கள் வருமானால் ஹாவுக்கு பேஷ் வைத்து ஓத வேண்டும்.

مِنْهُ

விதி விலக்கு: ஹாவுக்கு ஜேர் வைப்பதற்க்கு பதிலாக ஸுகூன் வைத்து ஓதுவது

أعراف ஸூராவில் உள்ள أرجهْ (7:111)

نمل ஸூராவில் உள்ள فَأَلْقِهْ (27:28)

விதி விலக்கு: ஹாவுக்கு ஜேர் வைப்பதற்க்கு பதிலாக பேஷ் வைத்து ஓதுவது

كهف ஸூராவில் உள்ள وما أَنْسَانِيهُ (18:63)

فتح ஸூராவில் உள்ள عليهُ الله (48:10)

பொதுவான விதி: ழமீர் உடைய ஹாவுக்கு முன்னால் ஸுகூன் பெற்ற எழுத்து வந்தால் நீட்டாமல் ஓத வேண்டும்

أحكام الهمزة
ஹம்ஜா உடைய சட்டங்கள்

ஹம்ஜா உடைய சட்டங்கள்

همزة وصل
ஹம்ஜதுல் வஸ்லு
சில குர்ஆன் பிரதிகளில் ٱ என குறிப்பிடப்பட்டுள்ளது

1. ஒரு வார்த்தை ஸுகூன் கொண்டு ஆரம்பமானால், அந்த வார்த்தையின் ஆரம்பத்தில் தற்காலிக ஹம்ஜாவை சேர்ப்பது அவசியம்
2. இரண்டு வார்த்தைக்கு நடுவில் ஹம்ஜா வந்தால், அது வாசிக்கப்படாது

فَاطْلُبْ

همزة قطع
ஹம்ஜதுல் கத்யீ

1. இந்த ஹம்ஜாவானது வார்தையிலுள்ள ஹம்ஜாவாகும்
2. இரண்டு வார்த்தைக்கு நடுவில் ஹம்ஜா வந்தால், அது வாசிக்கப்படும்

ءَاَنْذَرْتَهُمْ

குறிப்பு: ஒரு வினைச்சொல்லின் ஆரம்பத்தில் ஹம்ஜாத்துல் வஸ்லு இருந்து, இரண்டாவது எழுத்து ஹம்ஜாவாக இருந்தால், அந்த வினைச்சொல் மத்து எழுத்தாக வாசிக்கப்படும்

ٱؤْتُمِنَ என்பதை اُوْتُمِنَ என்று உச்சரிக்க வேண்டும்
ٱئْتُونِى என்பதை اِيْتُوْنِى என்று உச்சரிக்க வேண்டும்

ஒரு வினைச்சொல்லின் ஆரம்பத்தில் ஹம்ஜாத்துல் வஸ்லு இருந்து, மூன்றாவது எழுத்துக்கு ஜபரோ, ஜேரோ இருந்தால் ஹம்ஜாவிற்க்கு ஜேர் கொடுக்கப்படும்

ٱفْتَحْ என்பதை اِفْتَح என்று உச்சரிக்க வேண்டும்

ஒரு வினைச்சொல்லின் ஆரம்பத்தில் ஹம்ஜாத்துல் வஸ்லு இருந்து, மூன்றாவது எழுத்துக்கு பேஷ் இருந்தால் ஹம்ஜாவிற்க்கு பேஷ் கொடுக்கப்படும்

ٱنْظُرْ என்பதை اُنْظُرْ என்றும்
(سورة يوسف:9) ٱقْتُلُوْ என்பதை اُقْتُلُوْ என்றும் உச்சரிக்க வேண்டும்

ஒரு வார்த்தை ال ஐக் கொண்டு துவங்கினால் ஹம்ஜாவிற்க்கு ஜபர் கொடுக்க வேண்டும்

المالُ என்பதை اَلمالُ என்று உச்சரிக்க வேண்டும்

الَّذِيْ என்பதை اَلَّذِيْ என்று உச்சரிக்க வேண்டும்

பெயர் சொல்லானது ஹம்ஜதுல் வஸ்லைக் கொண்டு தொடங்கினால், ஹம்ஜாவிற்க்கு ஜேர் கொடுக்க வேண்டும்

اِثْنَتَيْنِ اِبْنٌ اِنْتِشَارْ اِنْفِطَارْ

اِسْمٌ اِثْنَيْنْ اِمْرَاةٌ اِبْنَةٌ
(3:45) مِّنْهُ-வில் நிறுத்தினால் ٱسْمُهُ என்பதை إِسْمُهُ என்று உச்சரிக்க வேண்டும்

குறிப்பு: ஒரு வினைச்சொல்லின் ஆரம்பத்தில் ஹம்ஜாத்துல் வஸ்லு இருந்து, மூன்றாவது எழுத்துக்கு பேஷ் இருந்து, அந்த வினைச்சொல்லின் ஒருமைச்சொல்லின் மூன்றாவது எழுத்துக்கு ஜேர் இருந்தால், ஹம்ஜாவிற்க்கு ஜேர் கொடுக்கப்படும்

ٱئْتُوا என்பதை اِيْتُوْ என்று உச்சரிக்க வேண்டும் ஏனெனில், ٱئْتُوا என்பதின் ஒருமைச்சொல் ٱئْتِ என்பதாகும்

தொடர்ச்சி...

أحكام الهمزة
ஹம்ஜா உடைய சட்டங்கள்

முதல் வார்த்தையின் கடைசி எழுத்து ஸுகூனுள்ளதாகவும், இரண்டாவது வார்த்தையின் ஆரம்பம் ஹம்ஜதுல் வஸ்லாகவும் வந்தால், இரண்டையும் சேர்த்து ஓதும் போது, கவனிக்க வேண்டியவை

1. முதல் வார்த்தையிலுள்ள ஸுகூன் பெற்ற எழுத்து மத்தாக இருந்தால் அந்த மத்தை நீக்க வேண்டியது
   → وَقَالُوْا الْحَمْدُ

2. முதல் வார்த்தையிலுள்ள ஸுகூன் பெற்ற எழுத்து மத்தாக இல்லையென்றால், மீம் அல்லது வாவை பேஷ் வைத்து ஓத வேண்டும்
   → اِشْتَرَوُ الضَّلٰلَةَ

3. முதல் வார்த்தையிலுள்ள ஸுகூன் பெற்ற எழுத்து, ஜர்ருடைய مِنْ என்பதிலுள்ள நூனாக இருந்தால் நூனுக்கு ஜபர் வைத்து ஓத வேண்டும்
   → مِنَ اللّٰهِ

4. முதல் வார்த்தையிலுள்ள ஸுகூன் பெற்ற எழுத்து, மத்தாக அல்லது ஜர்ருடைய مِنْ என்பதிலுள்ள நூனாக இல்லையென்றால், ஸுகூன் பெற்ற எழுத்துக்கு ஜேர் வைத்து ஓத வேண்டும்
   → قُمِ الَّيْلَ

விதி விலக்கு: ஆல இம்ரான் ஸுராவிலுள்ள மீமுக்கு ஜபர் கொடுத்து சேர்த்து ஓதும் போது மல்லாஹு (الٓمّٓ اللّٰه) என்று ஓத வேண்டும்

பிற குறிப்புகள்:
ஒரு வார்த்தை தன்வீனால் முடிந்து அடுத்து வார்த்தை ஸுகூனால் ஆரம்பித்தால், இந்த வார்த்தைகளுக்கு இடையில் கஸ்ரா பெற்ற நூன் இணைக்கப்படும். உதாரணம்: قَرْيَةٍ ٱسْتَطْعَمَآ (18:77) என்பதை قَرْيَةِ نِسْتَطْعَمَآ என்றும் جَزَآءً ٱلْحُسْنَىٰ (18:88) என்பதை جَزَآءَ نِلْحُسْنَىٰ என்றும் உச்சரிக்க வேண்டும்.

أحكام الوقف
நிறுத்துவதின் சட்டங்கள்

ஆயத்துகளில் நிறுத்துவதற்கான சட்டங்கள்

ஜபர், ஜேர், பேஷ், தோஜேர், தோபேஷ் இவை நிறுத்தும் இடத்தில் வந்தால், இவைகளை ஸுகூன் ஆக மாற்ற வேண்டும்

نستعينُ என்பதை نستعينْ என நிறுத்த வேண்டும்
مِنْ رَبٍّ رَّحِيْمٍ என்பதை مِنْ رَبٍّ رَّحِيْمْ என நிறுத்த வேண்டும்

தோஜபர் நிறுத்தும் இடத்தில் வந்தால், அலி∴ப் ஆக மாற்ற வேண்டும்

احدًا என்பதை احدَا என நிறுத்த வேண்டும்

ة என்பதை ه என்று மாற்ற வேண்டும்

اَلصَّلٰوة என்பதை اَلصَّلٰوه என நிறுத்த வேண்டும்

நிறுத்தும் போது: هُوَ என்பதை هُوْ ; هِيَ என்பதை هِيْ ; رُسُلَ , رُسُلِ , رُسُلُ என்பதை رُسُلْ ; كُتُبٌ , كُتُبٍ என்பதை كُتُبْ ; مَقْعَدَ , مَقْعَدٍ , مَقْعَدٌ என்பதை مَقْعَدْ ; قَمَرٍ , قَمَرٌ என்பதை
قَمَرْ ; ظُلِمَ என்பதை ظُلِمْ ; اَلْغَيْبِ , اَلْغَيْبَ , اَلْغَيْبُ என்பதை اَلْغَيْبْ ; اَلْيَوْمِ , اَلْيَوْمَ , اَلْيَوْمُ என்பதை اَلْيَوْمْ ; يَعْمَلُوْنَ என்பதை يَعْمَلُوْنْ ; غَيْبٍ , غَيْبٌ என்பதை غَيْبْ ; خَبِيْرٍ , خَبِيْرٌ என்பதை
خَبِيْرْ ; خَيْرٍ , خَيْرٌ என்பதை خَيْرْ ; سَمِيْعًا என்பதை سَمِيْعَا ; كَبِيْرًا என்பதை كَبِيْرَا ; هُدًى என்பதை هُدَى ; مُسَمًّى என்பதை مُسَمَّى ; سَاعَةً , سَاعَةٌ , سَاعَةٍ , سَاعَةُ என்பதை سَاعَهْ ;
سَبْعَةً , سَبْعَةٌ , سَبْعَةٍ , سَبْعَةُ என்பதை سَبْعَهْ ; رَحْمَةٌ , رَحْمَةٍ , رَحْمَةُ என்பதை رَحْمَهْ ; اللّٰهُ என்பதை اللّٰهْ ; رَسُوْلُهُ என்பதை رَسُوْلُهْ ; صَاحِبَتِهِ என்பதை صَاحِبَتِهْ ;
سَامِرِيُّ என்பதை [ஷத்துக்கு ஸு கூன் செய்வது] سَامِرِيّْ ; نِسَآءً என்பதை نِسَآءَ என நிறுத்த வேண்டும்

தொடர்ந்து ஓதும் போது: قُلْ اَللّٰهُ என்பதை قُلِ اللّٰهُ ; مُحَمَّدًا اَلَّذِى என்பதை مُحَمَّدَنِ الَّذِى ; عَلَيْهِمُ اللّٰهُ என்பதை عَلَيْهِمْ اللّٰهُ ; لَكُمْ اَلَّذِيْنَ என்பதை لَكُمُ الَّذِيْنَ ;
نُفُوْرًا اسْتِكْبَارًا (35:43) என்பதை نُفُوْرَنِ سْتِكْبَارًا ; قَوْمًا الله (சூரா 7 எண் : ஆயத் எண் 164) என்பதை قَوْمَنِ الله ; جَمِيْعًا الَّذِى (7:158) என்பதை جَمِيْعَ نِلَّذِى ;
قَلا رَبَّنَا (7:23) வில் உள்ள ல மை நீட்டவும்; مَثَلاً الْقَوْمُ (7:177) என்பதை مَثَلَنِ الْقَوْمُ ; إِذَا ادَّارَكُوْ (7:38) என்பதை إِذَدَّارَكُوْ ; اَوْلَهْوَا انْفَضُّوْ (62:11) என்பதை اَوْلَهْوَ نِنْفَضُّوْ ;
وَذَا النُّوْنِ (21:87) என்பதை وَذَنُّوْنِ என ஓத வேண்டும்

குறிப்பு: பொதுவாக اَنَا வை اَنَ என ஓதவும். انا வில் நிருத்தினால் அலிபை நீட்டி ஓத வேண்டும். மேலும் மற்ற எழுத்துகளுடன் اَنَا சேர்ந்து வந்தால் اَنَا என ஓதவும். உதாரணம்: وَاَنَاسِى (25:49) அல்லது وَاَبَآؤُ (39:17) அல்லது كَانَا (2:36)

## நிறுத்தக் குறிகளுடைய சட்டங்கள்

- அவசியம் நிறுத்தும் அடையாளம் ழு<br>ه<br>م (வக்∴பு லாஜிம்)<br>ط (வக்∴பு (முத்லக்)<br>سكة (அல்லது س) وقفه
- அவசியம் நிறுத்தக் கூடாத இடம்<br>لا (لا وقف عليه)
- நிறுத்தி ஓதுவது சிறந்த இடம்<br>قف (قد يوقف)
- சேர்த்து ஓதுவது சிறந்த இடம்<br>ز (வக்∴பு முஜவ்வஸ்)<br>ز–ج<br>ق (قيل عليه الوقف)<br>صلى (الوصل الاولى)<br>صل (قد يوصل)
- **1.** இரண்டு ∴ (معانقة) இருந்தால், ஏதாவது ஒன்றில் மட்டும் நிறுத்துவது அவசியம்<br>**2.** فلا என்பதற்க்கு அபிப்பிராய பேதம் உள்ளது
- நிறுத்துவதும் சேர்த்து ஓதுவதும் சமம்<br>ج (வக்∴பு ஜாயிஸ்)<br>ص (வக்∴பு (முரக்கஸ்)<br>[O மேல் لا]<br>[O மேல் ھ]
- முந்திய அடையாளத்தை பின்பற்றி ஓத வேண்டும்<br>ك (كذالك)

பொது விதிகள்:

1. م (வக்∴பு லாஜிம்)என்பதில் நிறுத்த வேண்டும், இல்லையென்றால் பொருள் மாறிவிடும்
2. வக்∴பு லாஜிம் அல்லாத இடங்களில் நிறுத்தினால், ஒன்று அல்லது இரண்டு வார்த்தை முன்னாலிருந்து ஓத வேண்டும்
3. وقفه அல்லது سكة அல்லது س உள்ள வார்க்கியங்களை ஒரே மூச்சில் ஓத வேண்டும். وقفه உள்ள இடங்களை سكة (அல்லது س) உள்ள இடங்களை விட சற்று அதிக நேரம் நிதானித்து (Pause) ஓத வேண்டும்,

குறிப்பு:

**1.** وَلاتَقْرَبُوا الصلاَةَ என்பதை நிறுத்தி ஓதக் கூடாது. அப்படி நிறுத்தி ஓதினால், ஆரம்பித்திலிருந்து மறுபடியும் ஓத வேண்டும்

**2.** اَلْحَمْدُ للهِ رَب الْعَالَمِيْن என்பதை ஓதும் போது, اَلْحَمْدُ لله என்பதை நிறுத்தி ஓதலாம். ஆனால், اَلْحَمْدُ لله உடன் رَب الْعَالَمِيْن ஜை சேர்த்து ஓத வேண்டும்

**3.** ஹப்சு முறைப்படி: வாக்கியத்தின் இறுதியில் (ه)ழமீர் ஹாவுக்குப் முன்னால் சுகூன் இருந்தால், ழமீர் ஹா நீட்டப்படாது. மற்றபடி ழமீர் ஹாவை நீட்ட வேண்டும். விதிவிலக்கு: فَيْهِ مُهَانَا (25:69)

**4.** ص க்கு மேலே س இருந்தால் அந்த வார்த்தையை س ஆக ஓதவும். س க்கு மேலே ص இருந்தால் அந்த வார்த்தையை ص ஆக ஓதவும்

**5.** ஹப்சு முறைப்படி: سورة هود வில் உள்ள مَجْرَاهَا என்ற வார்த்தையை மஜ்ரேஹா என ஓத வேண்டும்

1. وقف منزّل : ஹழ்ரத் ஜீப்ரீல் அலைஹிஸ்ஸலாம் நிறுத்திய இடம்
2. وقف غفران : நிறுத்தி ஓதுவது சிறந்தது
3. وقف كفران : சேர்த்து ஓதுவது சிறந்தது

أحكام سكتة
ஸக்தா உடைய சட்டங்கள்

ஸக்தா: சப்தத்தை நிறுத்திக் கொள்வதும் மூச்சை முறிக்காமல் இருப்பதுமாகும்

واجب
வாஜிப்

كهف ஸூராவில் உள்ள عِوَجاً (18:1)

يس ஸூராவில் உள்ள مِنْ مَرْقَدِنَا (36:52)

قيامة ஸூராவில் உள்ள قِيْلَ مَنْ (75:27)

مطففين ஸூராவில் உள்ள كَلاَّ بَلْ (83:14)

جائز
ஜாயிஸ்

اعراف ஸூராவில் உள்ள اَنْفُسَنَا (7:23)

اعراف ஸூராவில் உள்ள يَتَفَكَّرُوْا (7:184)

يوسف ஸூராவில் உள்ள عَنْ هذا (12:29)

قصص ஸூராவில் உள்ள الرِّعَاءُ (28:23)

சில உலமாக்களுடைய கருத்துப்படி

الحاقة ஸூராவில் உள்ள مَالِيَهْ هَلَكَ (69:29)
என்பதும் ஸக்தாவாகும்

பொது விதி: நிறுத்தும் இடங்களில் ஸக்தா வராது

## مخارج الحروف
## எழுத்துகளுடைய பிறப்பிடங்கள்



## சிபாத்துகள்
## எழுத்துக்களை உச்சரிக்கும் தன்மை



வகை 9

முன்ஹரி.˙.பா
லாமை மொழியும் போது நுனி
நாக்கின் பக்கம் திரும்பும். ரேயை
உச்சரிக்கும் போது நாவின்
முதுகின் பக்கம் திரும்பும்
ل ر

வகை 10

ஹுருப் முகர்ரரா
மொழியும் போது சிறிது இரட்டிப்பு
ஏற்படும். அதை மிகைப்படுத்தக்
கூடாது
ر

வகை 11

ஹுருப் த.˙.பஷ்ஷீ
சப்தம் பரவி வெளியாகும்
ش

வகை 12

ஹுருப் இஸ்திதாலத்
மக்ரஜிலிருந்து சிறிது
சிறிதாக வெளியாகும்
ض

ء தொண்டையின் இறுதியிலிருந்து வெளியாகும்
ع தொண்டையின் மத்தியிலிருந்து வெளியாகும்
ت மெல்லினமாகும்
ط வல்லினமாகும்
ث மெதுவாக வெளியாகும். நாவின் நுனியை மேலே உள்ள முன் பற்களின் ஓரத்தில் ஒட்டவைப்பதால் வெளியாகும்
س ص நாவின் ஓரத்தைக் கீழே உள்ள முன் பற்களில் இணைத்தால் சீட்டியின் சப்தம் வெளியாகும். ஆனால் ث யில் சீட்டி சப்தம் வெளிவராது.
ص வல்லினம்
س மெல்லினம்
ح நடுத் தொண்டையிலிருந்து வெளியாகும்
ه தொண்டையின் இறுதியிலிருந்து வெளியாகும்
ذ நுனி நாவை மேலே முன்பற்களில் இணைத்தால் மெதுவாக வெளியாகும்
ز இதில் சீட்டி சப்தம் வெளியாகும்
ظ ض இரண்டும் வல்லினம். ஆனால் ض நாவின் ஓரங்கள் அனைத்தும், இடது பக்கத்தின் மேல் கடைவாய்ப் பற்களின் அடிப்பாகத்திலாவது வலப்பக்கத்து கடைவாய்ப் பற்களிலாவது அழுத்தப்படுவதால் வெளியாகும்
ظ நாவின் ஓரத்தை முன் மேல்பற்களின் இணைப்பதால் வெளியாகும்
ض சரியாக உச்சரிப்பது சிரமம்

வகை 13

ஹுருப் குன்னா
ஷத்து செய்யப்பட்டிருக்கும்
போதுஇ மூக்கந் தண்டில்
சுழட்டி உச்சரிக்க வேண்டும்
ن م

வகை 14

ஹுருப் முஷ்தபஹுஸ்ஸௌத்
ஒரே ஒலியுள்ளவை போன்ற
எழுத்துக்களாய்
இருக்கும்

ا ع
ت د ط
ث س ص ش
ح ه
ذ ز ظ ض
ق ك خ
ل ظ ض

மக்ரஜை கண்டு பிடிக்க

சுகுன் செய்து இஅதற்கு
முன்னாலஜ˙ பா˙ உள்ளஹு
மஜ்ஜாவைகச˙ சேர்த்து வாசித்
தால˙ அதன˙ சப்தம˙ எங்கு
நிற்குமோ அதுவே அதன˙
மக்ரஜாகும்

ثَا ثُوْ ثِيْ اَثْ اُثْ اِثْ
ذَا ذُوْ ذِيْ اَذْ اُذْ اِذْ
حَا حُوْ حِيْ اَحْ اُحْ اِحْ
خَا خُوْ خِيْ اَخْ اُخْ اِخْ
رَا رُوْ رِيْ اَرْ اُرْ اِرْ
صَا صُوْ صِيْ اَصْ اُصْ اِصْ
ضَا ضُوْ ضِيْ اَضْ اُضْ اِضْ
طَا طُوْ طِيْ اَطْ اُطْ اِطْ
ظَا ظُوْ ظِيْ اَظْ اُظْ اِظْ
عَا عُوْ عِيْ اَعْ اُعْ اِعْ

# مخارج الحروف

